- 8 செப் 2007

சென்னை-600 025


உயர் கல்வி—அரசு பல்தொழில் நுட்பக் கல்லூரிகள்—2007—2008ம் ஆண்டிலிருந்து முதலாம் ஆண்டு பயிலும் பல்தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் இலவசமாக வழங்குதல்— ஆணை வெளியிடப்படுகிறது.

உயர்கல்வித் (பி1) துறை

அரசாணை (நிலை) எண்.288 நாள் : 17.8.2007.

படிக்கப்பட்டது:

1. தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை—25, கடித எண்.32911/Y3/2007, நாள் 17.5.2007.
2. தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், கடித எண்.3481/ அபி2/2007, நாள் 9.7.2007 மற்றும் 13.7.2007.

ஆணை:

2007—2008ம் ஆண்டிற்கான உயர் கல்வித்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலுரை அளிக்கையில், மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் பிற அறிவிப்புகளுக்கிடையே பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:—

> "தற்போது பல மேல்நிலைப்பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு அரசு பாடப்புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஆனால், அரசு பல்தொழில் நுட்பக் கல்லூரிகளில் படிக்கின்ற ஏழை மாணவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுவதில்லை. வரும் கல்வி ஆண்டில், முதலாம் ஆண்டு பல்தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு கணிதம், வேதியியல் மற்றும் இயற்பியல் பாடங்களுக்கான பாடப்புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படும். இதனால் ஆண்டு ஒன்றுக்கு 5080 மாணவர்கள் பயனடைவார்கள்."

இவ்வறிப்பு குறித்து தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் மற்றும் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்திடம் கலந்து ஆலோசிக்கப்பட்டது. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அதன் கடிதத்தில், தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட Mathematics, Applied Mathematics, Engineering Physics I & II (Single Colour) மற்றும் Engineering Chemistry Volume I & II (single volume) ஆகிய நான்கு தலைப்புகளில் முறையே 6000 பிரதிகள் அச்சிட 1.7.2007 முதல் இக்கழகத்தில் அமுலில் உள்ள புதிய அச்சுக் கூலி விகிதத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட தோராய செலவினம் ரூ.3,72,000/— ஆகும் என்றும் தெரிவித்து இந்நூல்களை அச்சிடும் பணி இக்கழகத்திற்கு அளிக்கப்படும்பட்சத்தில், மேற்குறிப்பிட்ட தொகையில் 90% முன்பணமாக வழங்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

2. மேற்கண்ட சூழ்நிலையில், தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் மற்றும் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் அளித்துள்ள கருத்தினை ஏற்று, பல்தொழில் நுட்பக் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கு கணிதம், செய்முறைக் கணிதம், வேதியியல் மற்றும் இயற்பியல் ஆகிய நான்கு தலைப்புகளில் முறையே 6000 பிரதிகள் தோராயமாக ரூ.3,72,000/— (ரூபாய் மூன்று இலட்சத்து எழுபத்து இரண்டாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் அச்சிட்டு 2007—2008ம் கல்வியாண்டில் இலவசமாக வழங்கும் பணியினை, தமிழ் நாட்டுப் பாடநூல் கழகத்திடம் அளிக்கலாம் எனவும் மேற்குறிப்பிட்ட தொகையில் 90% முன்பணமாக வழங்கலாம் எனவும் அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

/தபியச/

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத்தை கீழ்காணும் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்.

"2203–00 தொழில் நுட்பக் கல்வி–105. பல்தொழில் பயிற்சிப் பயிலகங்கள்–I. திட்டத்தில் சேராதது–ஏஏ. அரசு பல்தொழில் பயிற்சிப் பயிலக கல்லூரிகள் (ஆடவர்) 68. புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சிலேட்டுகள், முதலியவற்றிற்காகும் செலவு."
(த.தொ.கு. எண்.2203 00 105 ஏஏ 6807) — ரூ.2,94,000/–

மற்றும்

"2203–00 தொழில் நுட்பக் கல்வி–105. பல்தொழில் பயிற்சிப் பயிலகங்கள்–I. திட்டத்தில் சேராதது–ஏபி. அரசு பல்தொழில் பயிற்சிப் பயிலக கல்லூரிகள் (மகளிர்) 68. புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சிலேட்டுகள், முதலியவற்றிற்காகும் செலவு."
(த.தொ.கு. எண்.2203 00 105 AB 6805) – ரூ.78,000/–

4. மேலே பத்தி 2–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகைக்கு நிதி ஒதுக்கீடு இல்லை என்பதால் தேவையான நிதி 2007–2008ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் / இறுதித் திருத்திய நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய நிதி கிடைக்கும் வரையில் அனுமதிக்கப்பட்ட தொகையைப் பெற்று வழங்க துறைத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும், 2007–2008–ம் ஆண்டில் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்ய தக்க கருத்துருவை அனுப்பி வைக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் பணிக்கப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித்துறையில் அ.சா.கு.எண்.51905/Education-I/2007, நாள் 14.8.2007 எண்ணில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்க பேரேட்டு எண்: 722.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. கணேசன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை—25.
செயலாளர், தமிழ்நாட்டு பாடநூல் கழகம், சென்னை—6.
மாநிலக் கணக்காயர், சென்னை—18/35
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை—35.

நகல்
நிதித் (வரவு செலவு பொது–2 / கல்வி–1) துறை, சென்னை—9
முதுநிலை நேர்முக உதவியாளர், உயர் கல்வித்துறை அமைச்சர், சென்னை—9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை—9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

17/8/07
பிரிவு அலுவலர்.